# உச்ச நீதிமன்றத்திற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட குறிப்புரை 01/2018 தொடர்பிலான மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் அறிக்கை

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையமானது (CPA) இன்று அதன் சார்பாகவும் மற்றும் அதனுடைய நிறைவேற்று பணிப்பாளர் கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து சார்பாகவும், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் அவருடைய பதவிக்காலம் தொடர்பில் அபிப்பிராயமொன்றைப் பெற்றுக் கொள்வதற்காக உச்ச நீதிமன்றத்திற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட விடயம் தொடர்பில் தனது தலையீட்டினைச் செலுத்தி சமர்ப்பிப்புக்களைச் செய்திருந்தது.

ஜனாதிபதி சிறிசேன அரசியலமைப்பின் உறுப்புரை 129 (1) இன் கீழ் உச்ச நீதிமன்றத்திடம் அபிப்பிராயமொன்றை கீழ்வருமாறு கோரியிருந்தார் என ஊடகங்கள் 2018 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 8 ஆம் திகதி அறிக்கை வெளியிட்டிருந்தன.

*"தேர்தலொன்றின் மூலம் தெரிவு செய்யப்பட்டு, ஜனாதிபதி என்ற பதவியை அடைந்து 2015 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 9 ஆம் திகதி முதல் அரசியலமைப்பின் உறுப்புரை 32 (1) இற்கு இணங்க அப்பதவியினை பெற்றுக் கொண்டுள்ள நான், என்னுடைய தேர்தல் முடிவுகள் வெளிவந்து நான் ஜனாதிபதியாக அறிவிக்கப்பட்ட நாளாகிய 2015 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 9 ஆம் திகதியிலிருந்து ஆறு வருடங்களுக்கு என்னுடைய பதவிக்காலத்தை வகிப்பதற்கு அரசியலமைப்பின் ஏற்பாடுகளின் படி ஏதேனும் தடைகள் உள்ளனவா"*

இவ்வழக்கானது 2018 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 11 ஆம் திகதிக்கென பட்டியலிடப்பட்டது என்பதுடன் இவ்விடயம் தொடர்பான உச்ச நீதிமன்றத்தின் அபிப்பிராயம் 2018 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 14 ஆம் திகதி ஜனாதிபதிக்கு அறிவிக்கப்பட வேண்டும்.

அரசியலமைப்பின் பத்தொன்பதாவது திருத்தம் மீதான மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் நிலைப்பாடானது மிகவும் தெளிவானதாகும். குறிப்பிட்ட திருத்தமானது ஜனாதிபதியின் பதவிக்காலம் ஐந்து வருடங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது என்ற வெளிப்படையான ஏற்பாட்டினைக் கொண்டுள்ளது:

> அரசியலமைப்பின் உறுப்புரை 30(2): *குடியரசின் ஜனாதிபதி மக்களால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்பதுடன் ஐந்து ஆண்டுகளை கொண்ட ஒரு காலப்பகுதிக்கு பதவி வகித்தலும் வேண்டும்.*

மேலும் குறிப்பிட்ட திருத்தத்தின் நிலைபெயர்கால ஏற்பாடுகள் இவ் ஐந்து வருட கால மட்டுப்பாடானது தற்போதுள்ள ஜனாதிபதிக்கும் ஏற்புடையதாகும் என்பதனை வெளிப்படையாகவே கூறுகின்றன:

> அரசியலமைப்பின் பத்தொன்பதாவது திருத்தத்தின் பிரிவு 49(1)(ஆ): ***ஐயங்களைத் தவிர்ப்பதற்காக*** *இத்தால் பின்வருமாறு வெளிப்படுத்தப்படுகின்றது:- 2015, ஏப்பிரல் 22 ஆம் தேதிக்கு முற்போந்த நாளன்று ஜனாதிபதியாகவும் பிரதம அமைச்சராகவும் முறையே பதவி வகிக்கின்ற ஆட்கள்* ***இச்சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான*** *அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கமைய அத்தகைய தேதிக்குப் பின்னர் அத்தகைய பதவியைத் தொடர்ந்தும் வகித்தல் வேண்டும்; அத்துடன் (அழுத்தங்கள் சேர்க்கப்பட்டுள்ளது)*

மேலும் அரசியலமைப்பிற்கான பத்தொன்பதாவது திருத்தமானது இத்திருத்தத்தின் எவ்வெவ் ஏற்பாடுகள் தற்போது ஜனாதிபதியாக பதவி வகிக்கின்ற ஜனாதிபதி சிறிசேனவிற்கு ஏற்பாகாது என்பதனைத் தெளிவாக கூறுகின்றது என்பதுடன் பதவிக்காலத்தின் குறைப்பானது அத்தகைய ஒரு ஏற்பாடல்ல (பத்தொன்பதாவது திருத்தத்தின் பிரிவு 51). ஆகவே இதற்கிணங்க ஜனாதிபதி சிறிசேனவின் பதவிக்காலம் 2015 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 9 ஆம் திகதியிலிருந்து ஐந்து வருடங்களாகவே (2020 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 9 ஆம் திகதி) புரிந்து கொள்ளப்பட வேண்டும் என்பதுடன் ஆறு வருடங்கள் வரை அல்ல (2021 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 9 ஆம் திகதி).

பத்தொன்பதாவது திருத்தத்தின் உருவாக்கத்திற்கான வழிநடத்துகையின் போது ஜனாதிபதி சிறிசேன ஜனாதிபதியின் பதவிக்காலத்தினை ஐந்து வருடமாக குறைக்கின்ற ஏற்பாடானது தன்னையும் பிணிக்குமென தாமாகவே குறிப்பிட்டிருந்தார் என்பதனை மாற்றுக் கொள்கைகளுக்கான

நிலையமானது குறித்து காட்டுகின்றது. மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையமானது ஜனாதிபதி தன்னுடைய முன்னைய உறுதிமொழிகளை நினைவில் கொண்டிருப்பார் என நம்புகின்றது. அத்துடன் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையமானது அரசியலமைப்பு மற்றும் அரசியல் செயற்பாட்டாளர்கள் பத்தொன்பதாவது திருத்தத்தின் பயனுறு தன்மையினை நிலைநிறுத்திக் கொள்கின்ற வகையில் செயற்பட வேண்டும் என வலியுறுத்துகின்றது.

இத்தகைய ஒரு சந்தர்ப்பத்திலே பொதுமக்கள் தலையீடுகளை மேற்கொண்டு சமர்ப்பிப்புக்களைச் செய்வதற்கு அனுமதியளித்து அதனை சாத்தியப்படுத்திய உச்ச நீதிமன்றத்தின் பிரதம நீதியரசர் மற்றும் ஏனைய நீதிபதிகளை மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையமானது பாராட்டுகின்றது. முன்னைய காலங்களிலே இது போன்றதான நடபடிமுறைகளிலே சட்டமா அதிபர் மாத்திரமே விளக்கமளிப்பதற்கு அனுமதிக்கப்பட்டிருந்தார் என்பதனை மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையமானது குறித்து காட்டுகின்றது. அரசியலமைப்பின் உறுப்புரை 129 (1) இல் குறிப்பிடப்பட்டுள்ள, விடயங்களை அபிப்பிராயத்திற்காக ஆற்றுப்படுத்தல் தொடர்பான செயன்முறையானது வெளிப்படைத்தன்மை இல்லாத ஒரு நிலைக்கு இட்டுச் செல்லும் என்பதனை மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையமானது தொடர்ச்சியாக கூறி வந்துள்ளது. ஆகவே மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையமானது வழங்கப்படப்போகின்ற இவ் ஆலோசனை அபிப்பிராயமானது பொது மக்கள் அறிந்து கொள்ள கூடிய வகையில் பகிரங்கமாக காணப்படும் என்பதனை உறுதி செய்யுமாறு உச்ச நீதிமன்றத்திடம் மிக்க மரியாதையுடன் வேண்டுகோள் விடுக்கின்றது.

Centre for Policy Alternatives (Guarantee) Limited | 6/5, Layards Road, Colombo 5, Sri Lanka
Tel: ++94112081384, +94112081385, +94112081386 | Fax: +9411 2081388 | Email: info@cpalanka.org | Web: www.cpalanka.org